# அக்மீமன பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 திசெம்பர் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அக்மீமன பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,385,000 பெறுமதியான இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் மற்றும் ரூபா 2,904,036 தொகையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவினமாக காண்பிக்கப்படாமல் மீண்டெழும் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 67,175,734 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,825,908 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,473,016 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,396 | 5,364 | 1,956 |
| (ii) | வாடகை | 1,710 | 1,595 | 436 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 867 | 808 | 258 |
| (iv) | சேவைக் கட்டணம் | 4,687 | 4,816 | - |
| (v) | ஏனைய வருமானம் | 26,928 | 11,738 | 31,621 |

### 2.2.2 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பிரதேச சபைக்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 1,666,027 தொகையான ஆதனவரி, ரூபா 289,766 தொகையான ஏக்கர் வரி மற்றும் ரூபா 436,102 தொகையான வாடகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,142,261 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 18,083,595 |

### 2.2.4 வங்கிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆகஸ்ட் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 1,030,188 தொகையான 203 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,976,475 தொகையான நேரடி செலவு வைத்தல் மற்றும் ரூபா 31,317 தொகையான வங்கி வரவு வைத்தல்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சபையினால் ரூபா 77,238 தொகை மாத்திரமே மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் 2008 திசெம்பர் 16 ஆந் திகதிய 05/02/1/384 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7 இன் பிரகாரம் சகல நிர்மாணங்களுக்காகவும் இணக்கச்சான்றிதழ் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் தளபாட மற்றும் வியாபார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக இணக்கச்சான்றிதழ் மிகவும் சிறு அளவிலேயே வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஈ/எப்/எஸ்/4(xiii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்